**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| வழக்கு எண் | OS | 35 | of | 2018 |
|---|---|---|---|---|

**2025-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 18-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| **பெயர்** | **முகமது உசைன்** | **தந்தை பெயர்** | |
|---|---|---|---|
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-6.08.2025**

**வா.சா.-1**

**குறுக்கு விசாரணை-**

வாதி தரப்பு ஆவணங்களை இதுநாள் வரை பார்த்தேனா என்றால்வழக்கறிஞர் மூலம் வாங்கிப் பார்த்தேன். நான் முதலில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சம் ஆக்கப்பட்டேன் என்றால் சரிதான். அந்த உத்தரவை ரத்து செய்ய மனு தாக்கல் செய்து அதுவும் பின்னிட்டு தள்ளுபடி ஆனது என்றால் சரிதான். அந்த உத்தரவை எடுத்து உயர்நீதிமன்றத்தில் CRP எண். 178/2021 தாக்கல் செய்தேன். அந்த CRP எண். 178/2021 எனக்கு சாதகமாக உத்தரவானது. அந்த உத்தரவில் 2 வார காலத்திற்குள் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டும் என்றும், 4 வாரத்திற்குள்

ரூ.50 ஆயிரம் வாதிக்கு கொடுக்க வேண்டும் என்று உத்தரவானது என்றால் சரிதான். நான் 07.08.2021 அன்றுதான் எதிர் வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எதிர் வழக்குரை பக்கம் 5 ல் பாரா எண்.11 ல் unregistered partnership firm என்று சொல்லியிருக்கிறேன். எதிர்வழக்குரையில் கணக்கு வழக்குகள் எதுவும் தரவில்லை. கணக்கு வழக்கை காட்டக்கூடிய பட்டியல் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பு வாதி கொடுத்த அறிவிப்பு வா.சா.ஆ.3 என்றால் சரிதான். நான் கொடுத்த பதிலறிவிப்பு வா.சா.ஆ.5 என்றால் சரிதான். பதிலில் கணக்கு வழக்கு குறித்து எதுவும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.2 ல் வாதி கோரியுள்ள தொகையை கொடுக்கக் கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல. அதனால்தான் நான் பதிலறிவிப்பில் விவரங்கள் சொல்லவில்லை என்றால் சரியல்ல. CRP உத்தரவுப்படி வாதிக்கு உரிய காலத்தில் ரூ.50 ஆயிரம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிதான் திருப்பி அனுப்பிவிட்டார். தாவா தீர்ப்பாணைக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை-இல்லை.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu